# இயல் 9.2: மனிதநேயம்

## அ) குறு வினா

1. **யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?**

விடை: மனித நேயத்துடன் வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

2. **வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?**

விடை: வள்ளலார் பசிப்பிணியைப் போக்க வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்.

3. **மனித நேயம் என்றால் என்ன?**

விடை: எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே மனிதநேயம் ஆகும்.

4. **அன்னைதெரசாவிற்கு நோபல் பரிசு தேடிவரக் காரணம் யாது?**

விடை: "மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி" என்று வாழ்ந்த காரணத்தினால் அமைதிக்கான நோபல் பரிசு அன்னைதெரசாவிற்கு கிடைத்தது.

## ஆ) சிறு வினா

**1. கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?**

விடை:

- கைலாஷ் சத்யார்த்தி சிறுவயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் காண்பார். அவன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டிருப்பான்.
- ஏன் அந்தச் சிறுவன் தன்னைப்போல் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. தன் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார். "பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு வரவில்லை என்று கூறினர். மேலும், வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான்" என்ற பதில் கிடைத்தது. அந்த பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.
- இதுவே கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு ஆகும்.